DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, MADURAI
O.S.No.115/2019
DEPOSITION OF D.W.1 WITNESS FOR THE DEFENDANT
.....

| | |
|---|---|
| Name | : திரு.P. சுரேஷ்பாபு |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.12.2022

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்து என்னுடையது. எனது ஆதார் அட்டை நகல் பி.வா.த.சா.ஆ.1 (அசலுடன் ஒப்பிடப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 1ம் பிரதிவாதி கடைக்கு பொருட்கள் கொள்முதல் செய்த ரசீது கார்பன் நகல் இரண்டு பி.வா.த.சா.ஆ.2(வரிசை). 24.7.2015ம் தேதி மதுரை உயர்நீதிமன்ற கிளை Crl.O.P.No.14026/2015-ன் உத்தரவு சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.3. 10.4.2017ம் தேதி மதுரை டவுன் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் I.A. No.946/2016-ல் வாதி கனகவேல் தாக்கல் செய்த மனு தள்ளுபடியான உத்தரவு சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.4. 12.6.2019ம் தேதி மதுரை டவுன் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.741/2014 பிராது சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.5 (வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

24.10.2016ம் தேதி மதுரை டவுன் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் RCOP No.186/2016 -ன் உத்தரவு சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.6. 6.8.2016ம் தேதி தாவா சொத்தில் உள்ள 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தொலைபேசி கட்டண பில் அசல் பி.வா.த.சா.ஆ.7. தாவா சொத்தின் மின் கட்டண அட்டை நகல் பி.வா.த.சா.ஆ.8 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) தாவா சொத்தின் பல்வேறு தேதிகளிட்ட மின்கட்டண ரசீதுகள் மின்னஞ்சல் நகல் பி.வா.த.சா.ஆ.9 (வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 1ம் பிரதிவாதி மாறன் எனக்கு எழுதிக்கொடுத்த 21.6.2016 தேதிய அசல் பவர் பத்திரம் பி.வா.த.சா.ஆ.10. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணை-(2ம் பிரதிவாதி தரப்பில்)

இல்லை என்று கற்றறிந்த வழக்குரைஞர் தெரிவித்தார்.

குறுக்குவிசாரணை- (வாதி தரப்பில்)

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

ஒப்பம்.P. சுரேஷ்பாபு

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/xxxxxxx
முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.